## நீங்கள் வெட்கப்படாமலும், கலங்காமலும் இருங்கள். சங்கீதம் 81 : 16

**நீங்கள் வெட்கப்படாமலும், கலங்காமலும் இருப்பீர்கள்**

இந்த வருடத்தை முடிக்கப்போகிற என் அன்பு சகோதரியே, சகோதரனே,

**நீங்கள் வெட்கப்படாமலும், கலங்காமலும் இருப்பீர்கள்,**

என மீண்டும், மீண்டும் மனமார வாழ்த்துகிறேன்.

மரியாளோ, தேவ தூதனைக்கண்டு, அவன் வார்த்தையில் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ, என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி மரியாளே பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றார் என்றார்.

**நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் – ஆதலால்**
**வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பாய்**

**பாடுவோமா !**

கிருபையிதே, தேவ கிருபையிதே,
தாங்கி நடத்தியதே,
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்து நாம் ஆர்ப்பரிப்போம்.

வார்த்தையினால் அவர் தீர்த்தார்
எந்தன், வியாதியும் வேதனையும் வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோர்
இகமதில் வேறெமெக்காருமில்லை – கிருபையிதே

எத்தனையோ பரிசுத்தர்கள் மறைந்தே
மகிமை சேர்த்தனரே, பூரணமாய்
காத்தனரே, கர்த்தர் எமை
கருணையினால் தூய சேவை செய்ய – கிருபை

மாதம் கடந்து செல்கின்றதே, இன்னும் ஒரு மாதம் தானே உள்ளது என அங்கலாய்க்கும் என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

**ரோமர் 10 : 11 கூறுகிறது**

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லை.

**ஆதலால் கீழ்க்கண்ட ஏசாயா 50 : 7 வசனத்தின்படி**
**உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.**

ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார், ஆகையால் நான் வெட்கப்படேன்.

**ஏனெனில் பக்தன் பாடுகிறார்**

கர்த்தருக்கு காத்திருப்போர்
யாரும் வெட்கப்பட்டு போவதில்லை

ஆதலால் என் அன்பு சகோதரியே, சகோதரனே,
கலங்கவேண்டாம்.

**ரோமர் 10 : 23 கூறுகிறது**

அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே

**வாக்குத்தத்தம் என்ன ?**
**நீங்கள் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பீர்கள்.**
**விசுவாச அறிக்கை என்ன**
**ஆண்டவர் எனக்கு துணை செய்கிறார்**
**ஆகையால் நான் வெட்கப்படேன். ஆமென்.**